அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் *(குறுக்கீடுகள்)* திரு. ஜி.கே. மணி வலியுறுத்துகிறீர்களா? *(குறுக்கீடுகள்)* திரு. ஜி.கே. மணி வலியுறுத்துகிறீர்களா? *(குறுக்கீடுகள்)* தீர்மானத்தை வலியுறுத்துகிறீர்களா? *(குறுக்கீடுகள்)*

பிற்பகல் 2-05

DR. K. PONMUDI: Hon. Speaker Sir, Point of Order.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அரசினுடைய முடிவுக்கு, முடிவான கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த தீர்மானத்தின்மீது பேசி, அரிசி விலையை எப்படியாவது குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தினோம். அரிசி விலையைக் குறைக்காமல், முதலமைச்சர் அவர்கள் இம்மாமன்றத்திலே கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், இந்த நாட்டு மக்களுக்குச் செய்த பாதகச் செயலைக் கண்டித்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச் செய்கின்றோம். *(கூச்சல்)*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அவையைவிட்டு வெளியேறினார்கள்.)

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய தீர்மானம், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட காரணத்தால் வலியுறுத்தப்படவில்லை என்பதைத் தீர்ப்பாக அளிக்கிறேன்.

9. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2002), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 29-10-2002ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி.*

(ஆ) பேரவை அலுவல்கள் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த இனம் 2 முதல் 7 வரையிலான சட்டமுன்வடிவுகள் நாளை (31-10-2002) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-10-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.